# சைவசித்தாந்த நோக்கில் மறக்கருணை

**இ.ஜெயந்திரன்**[1]


## ஆய்வுச் சுருக்கம்:

*முதல்வன் உயிர்கள்மீது கொண்டுள்ள பெருங்கருணையினை அறக்கருணை, மறக்கருணை என்று இரண்டாகப் பிரிக்கலாம். முதல்வனால் உயிர்களுக்கு வரும் இன்பங்கள் அறக்கருணை என்றும் முதல்வனால் உயிர்களுக்கு வரும் துன்பங்கள் மறக்கருணை என்றும் கூறப்படும். முத்திநிலையில் முதல்வன் இன்பத்தைக் கொடுக்க உயிர்கள் அவ்வின்பத்தைப் பெற்று அனுபவிக்கின்றது. இது முழுமையும் அறக்கருணையே. ஆனால் கட்டுநிலையில் உயிர்களின் மலநீக்கத்தின்பொருட்டு துன்பமும் இன்பமும் மாறி மாறித் தரப்படுகின்றன. இது உயிர்கள் கொண்டுள்ள ஆணவ நோய்கு ஏற்ப முதல்வனாகிய வைத்தியநாதன் வழங்கும் இனிப்புமருந்தும் மற்றும் கசப்பு மருந்தும் போன்றன. மன்னன் தன் ஆணைவழிவாரப் பிரசைகளைத் தண்டம் செய்வதும் வைத்தியன் கடுமையான நோயினை ரணசிகிச்சை செய்து குணப்படுத்துவதும் போன்றது ஈசனார் முனிவுமாகும். பஞ்சகிருத்தியத்தில் முதல்வன் உயிர்கது அறிவினை மறைக்கும் திரோபவமும், சங்காரம் செய்வதும் மறக்கருணையே. இந்த ஆய்வானது பன்னிரு திருமுறைகள் மற்றும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களில் காணப்படும் மறக்கருணைபற்றிய கருத்துக்களை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டது. குறிப்பாக கண்ணப்பதேவர் திருமறம், கோபப் பிரசாதம் முதலிய திருமுறைகளிலும் சிவஞானபோதம், சித்தியார், போற்றிப் ப.்.றொடை முதலிய சாத்திரநூல்களிலும் காணப்படும் மறக்கருணை பற்றிய கருத்துக்களை சமூக மற்றும் தத்துவ நோக்கில் ஒப்பீடு, பகுப்பாய்வு மற்றும் விவரண ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி இவ்வாய்வு செய்யப்படுகின்றது. முதல்வனது சத்திகளை இச்சா, ஞானா, கிரியா என்று மூவகையில் அடக்கிவிடலாம். ஞானம், கிரியை வேறுபாட்டுக்கு ஏற்பவே மகேசுர மூர்த்தங்கள் சைவசித்தாந்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இச்சை பற்றிக் கூறுகின்றபோது முதல்வனது இச்சை உயிர்கள்பால் நேசம் மாத்திரமே அது என்றும் மாறாதது என்பது சித்தாந்தத் துணிபு. தடத்த நிலையில் முதல்வனது சத்தி திரோதாயியாக நின்றே உயிர்க்கு வினையூட்டுதலையும், முதல்வன் பஞ்சகிருத்தியம் செய்யத் துணையாகவும் நிற்கிறது. இந்நிலையில் உள்ள அவனது சத்தி உயிர்கள் மீது கோபம் கொண்டுள்ளது என்றும் அந்நிலை நீங்குதல் உயிர்க்கு அருள்வதற்காகும்.*


**திறவுச்சொற்கள்:** மறக்கருணை, திரோதாயி, நிக்கிரகம், முனிவு, கோவப் பிரசாதம்

[1] *சைவசித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
jeyandran1981@gmail.com

**அறிமுகம்**

முதல்வன் உயிர்கள் மீது கொண்டுள்ள பெருங்கருணையினை அறக்கருணை, மறக்கருணை என்று இரண்டாகப் பிரிக்கலாம். முதல்வனால் உயிர்களுக்கு வரும் இன்பங்கள் அறக்கருணை என்றும், முதல்வனால் உயிர்களுக்கு வரும் துன்பங்கள் மறக்கருணை என்றும் கூறப்படும். சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி மறக்கருணை என்பதற்கு 'நிக்கிரக ரூபமான கருணை' (Tamil Lexicon.Vol.V:8117) என்று பொருள் தருகின்றது. சைவசித்தாந்தம் கூறும் முதல்வன் அனைத்துலகினையும் முற்றழிப்புச் செய்யும் மஹாசங்கார காரணன். முதல்வனது திரு நாமங்கள் அவனது மறக்கருணை வடிவான பெருங்கருணையினைப் பறைசாற்றுகின்றன. இதனைக் காஞ்சிபுராணம்,

''இன்பம் செய்தலின் சங்கரன் எம்பிரான்
இன்பம் ஆக்கலின் சம்பு இடும்பை நோய்
என்பதோட்டும் இயல்பின் உருத்திரன்
என்பரால் அவை என்னிடைப் பொய்த்தவோ'' (காஞ்சிபுராணம்,பரசிராமேச்சரப் படலம்:44).

என்று கூறுதல் காணலாம். முதல்வன் உயிர்களுக்கு இன்பத்தைச் செய்தலில் 'சங்கரன்' எனப்படுவான். முதல்வன் உயிர்க்கு இன்பத்தை உண்டாக்குவதில் 'சம்பு' எனப்படுவான். முதல்வன் உயிர்க்குத் துன்பத்துக்குக் காரணமான நோயினை ஓட்டும் இயல்பினால் 'உருத்திரன்' எனப்படுவான் என்றும் கூறுகின்றது. முதல்வன் மறக்கருணை நாயகனாக இருப்பதானாலே அவனுக்கு இப்பெயர்கள் வந்தன. திருவருட்பயனும்,

நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன். (திருவருட்பயன்.பா.9)

என்று கூறுதல் காணலாம்.

முதல்வன் விருப்பு வெறுப்பற்றவன். மாணிக்கவாசகர் முதல்வனை, 'இன்பமும் துன்பமும் இல்லான்' என்று கூறுகிறார். அவரே அடுத்து 'இன்பமும் துன்பமும் உள்ளான்' என்கிறார். முதல்வன் இன்பம் துன்பம் இல்லாதவனே. ஆனால் உயிர்களின் பொருட்டு அறிவித்தும், அறிந்தும் வருவதால் அவன் இன்ப துன்பம் உள்ளவன் எனப்படுகிறான். சைவசித்தாந்தம் இதனைக் காட்டும் உபகாரம், காணும் உபகாரம் என்று இரண்டாகக் கூறுகின்றது. விருப்பு வெறுப்பற்ற இறைவனுக்கும் ஒரு விருப்பு உண்டு. அது உயிர்கள் பாலுள்ள நேசமாகும். அந்த ஒப்பற்ற நேசமே உயிர்களைப் பக்குவப் படுத்தும் வரை மறக்கருணையாகவும், அவை பக்குவம் பெற்றபின்பு அறக்கருணையாகவும் செயற்படுகின்றது. முதல்வன் நல்கும் நீதியானது என்றும் நடுநிலையானது. இன்பமும் துன்பமும் அவரவர் வினைப்பயனாகும். முதல்வன் நடுநிலை தவறாதே மறக்கருணை நல்குகிறான் என்பதை,

''அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி அழகெழுத லாகா அருட்சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி சோமனையுங் காலனையும் காய்ந்தவடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றுமடி **பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி**
திருந்துநீர்த் தென்கெடில நாடன்னடி திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி'' (6:6:4)

எனும் அப்பர் பாடலில் காணலாம். இங்கு 'பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி' என்பது முதல்வன் நடுநிலை தவறாதவன் என்பதை காட்டுவதாகும். சோமனையும், காலனையும் ஒறுத்தமை நடுநிலை நின்றே முதல்வன் செய்துள்ளான். எனவே முதல்வன் தரும் தண்டனையும் நீதியானதே.

துன்பம், இன்பம் இரண்டும் முதல்வனது கருணை என்பதை,

இறைவனிங் கேற்ப தென்னை இதமகி தங்க ளென்னின்
**இறைபர னுயிர்க்கு வைத்த நேசத்தின் நிலைமை யாகும்**
அறமலி இதஞ்செய் வோருக் கனுக்கிர கத்தைச் செய்பவன்
மறமலி அகிதஞ் செய்யின் நிக்கிர கத்தை வைப்பன். (சிவஞானசித்தியார்.சு.பா:104)

என்று சிவஞான சித்தியார் கூறுகின்றது.

முத்திநிலையில் முதல்வன் இன்பத்தைக் கொடுக்க உயிர்கள் அவ்வின்பத்தைப் பெற்று அனுபவிக்கின்றது. இது முழுமையும் அறக்கருணையே. ஆனால் கட்டுநிலையில் உயிர்களின் மலநீக்கத்தின்பொருட்டு துன்பமும், இன்பமும் மாறிமாறி முதல்வனால் ஊட்டப்படுகின்றன. இது உயிர்கள் கொண்டுள்ள ஆணவ நோய்க்கு ஏற்ப முதல்வனாகிய வைத்தியநாதன் வழங்கும் இனிப்பு மருந்தும் மற்றும் கசப்பு மருந்தும் போன்றன. இங்கு உயிர்கள் மலநீக்கம் பொருட்டு முதல்வனால் வழங்கப்படும் துன்பங்கள் அத்தனையும் மறக்கருணை என்பதை,

நிக்கிர கங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வ(து)
அக்கிர மத்தால் குற்றம் அடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
இக்கிர மத்தி னாலே ஈண்டறம் இயற்றி டென்பன்
எக்கிர மத்தி னாலும் இறைசெயல் அருளே யென்றும். (சிவஞானசித்தியார்.சு.பா:105)

என்று சிவஞானசித்தியார் கூறுன்றது.

முதல்வன் வைத்தியனாகவும் அரசனகவும் இருந்து மலநோய் நீக்குகிறான் என்பதைத், 'தரணியொடு தராபதிபோல' (சிவஞானசித்தியார்.சு.பா:94) எனும் செய்யுளில் சிவஞானசித்தியார் கூறுகின்றது. இங்கு 'தரணி' என்பது நோயினைக் கடப்பித்தல் எனும் பொருளில் மருத்துவனையும், 'தராபதி' என்பது மன்னனையும் குறித்து நிற்கின்றது. மன்னன் தனது ஆணையினை ஏற்று நடப்பவர்க்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பதும், தனது ஆணைவழிவாரப் பிரசைகளைத் தண்டம் செய்து சிறைவைப்பதும் செய்கின்றான். அதுபோலவே வைத்தியன் நோயாளியின் தன்மைக்கு ஏற்ப வாகட நூலில் கூறியபடி இனிப்பு மருந்தோ கசப்பு மருந்தோ கொடுத்து நோயினைக் குணமாக்குவதும், நோயினது கடுமைகண்டு அதற்கு ரணசிகிச்சை செய்து குணப்படுத்துவதும் செய்கிறான். வைத்தியனும் மருத்துவனும் போன்றே ஈசனார் முனிவுமாகும். நன்மை செய்த உயிர்க்கு இதம் செய்வதும் தீவினை செய்கின்ற உயிர்க்கு மாநரகம் இட்டு அகிதம் செய்வதும் ஈசனார் மறக்கருணையாகும்.

நடைமுறை வாழ்வில் தாய்தந்தையர் தமது பிள்ளைகள் தவறான வழியில் செல்லுமிடத்து அவர்களைப் புளியம் வளரால் அடித்து ஒறுத்து நேரியவழியில் செலுத்துவது அவர்கள் மீது கொண்ட கருணையினால் ஆகும் இதுபோன்றே ஈசனார் முனிவுமாகும். இதனை,

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொ லாற்றின்
வந்திடா விடின் உறுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடில் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவு மென்றும். (சிவஞானசித்தியார்.சு.பா:106)

என்று சிவஞான சித்தியார் கூறுகின்றது.

பஞ்சகிருத்தியத்தில் முதல்வன் உயிர்களது அறிவினை மறைத்தலும், உயிர்கள் நுகரும் பிராரத்த கன்மம் முடிவடைந்தவுடன் அவற்றினைச் சங்காரம் செய்வதும் மறக்கருணையே. பஞ்சகிருத்தியத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் உடலில் நிகழ்வது. மறைத்தலும் அருளலும் உயிரில் நிகழ்வது. பொதுவகையில் நோக்கும் போது அழித்தல் நிக்கிரகம் போல் தோன்றினும் சிறப்புவகையில் நோக்குகையில் அது அனுக்கிரகமே. அழித்தல் என்பது வினைப்போகம் நுகர்ந்து களைப்புற்ற உயிர்க்கு இளைப்பாற்றல் செய்வதாகும். பிரமாண நூல்கள் பழைய ஆடையினை நீக்கிப் புதிய ஆடையினை உடுத்தல் போன்று என்று இதனைக் கூறுகின்றது. தத்துவ நோக்கில் ஒரு உயிர்க்கு அனுபவத்துக்கு வரும் பிராரத்த கன்மம் முடிவடைந்து விட்டநிலையில் அவ்வுயிரைப் பிறப்பில் இருந்து முதல்வன் விடுவிக்கிறான். பின்னர் செய்த சஞ்சித வினையில் இருந்து அனுபவத்துக்கான பிராரத்த கன்மம் பக்குவம் பெற்று வந்தவிடத்து முதல்வன் மீண்டும் உயிர்க்கு பிறவியினைத் தருகிறான். அதாவது ஆணவ மலம் பக்குவம் பெற படைப்பும், கன்மமலம் பக்குவம் பெற அழிப்பும் நிகழ்கின்றன. அதுபோலவே மறைத்தல் என்பது உயிரின் அறிவினை வளர்த்தலாகும். இறைவன் ஏன் உயிரின் அறிவினை மறைக்கிறான் எனின் அதுவும் கருணையினாலே செய்கிறான். உயிரின் அறிவில் ஆணவமானது விரவி நின்று அதனை அறியவொட்டாது துன்பத்தைச் செய்து வருகின்றது. ஆணவம் நீங்குமானால் உயிரின் அறிவு பிரகாசிக்கும். ஆணவம் சடம். சடமாகியபொருள் ஆற்றல் பயன்படுத்தினாலே தேய்வடையும். ஆணவம் பக்குவம் பெற்று உயிர் அறிவு பிரகாசிக்க வேண்டுமாயின் ஆணவம் செயற்பட வேண்டும். இவ்வாறு ஆணவத்தைச் செயற்படுத்துவது முதல்வனது சிற்சத்தியே. ஆணவம் தூண்டப்படுவதால் உயிர் அறிவு மறைக்கப்படுகின்றது. ஆனால் மறுவகையில் உயிர் அறிவு வளர்க்கப்படுகின்றது. இதனையே ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை'' (திருவெம்பாவை:17) என்று மணிவாசகர் கூறுகின்றார். எனவே முதல்வன் செய்யும் அழித்தல், மறைத்தல் என்பனவும் மறக்கருணையே இதனையே,

அழிப்பு இளைப்பு ஆற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பு அருள் செய்தி தானும்

பழிப்புஒழி பந்தம்வீடு பார்த்திடில் அருளே எல்லாம். (சித்தி.சுப:57)
என்று சித்தியார் கூறுதல் காணலாம்.

மநுநீதிகண்ட சோழன் தனது மகனைத் தேர்க்காலில் வைத்து ஊர்ந்த செயல் மறக்கருணை என்று போற்றிப் ப.ஃ.றொடை கூறுகின்றது. தவம் இருந்து பெற்ற ஒப்பற்ற மகனை தானே தேர்க்காலில் ஊர்ந்த அரிய செயல் எதனால் நிகழ்ந்தது எனில் மறுமைக்கண் வீதிவிடங்கனுக்கு நரக வேதனை கிடைத்துவிடக் கூடாது எனும் பெருங்கருணையினாலாகும். மன்னவன் கடவுளின் பிரதிநிதி என்பதால் மன்னன் தரும் தண்டனை கடவுள் தரும் தண்டனைக்கு நிகர் என்பதால் நரக வேதனையினை நீக்க சோழன் மகனைத் தேர்க்காலில் ஊர்ந்தான் என்பதை,

"வெஞ்சினத்தால்
அல்ல லுறுத்தும் அருநரகங் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி" (போற்றிப் ப.ஃ.றொடை.வரி:55-57).

என்று உமாபதி சிவாச்சாரியார் கூறுகிறார். இதுபோன்றே நரகிடைத் துன்பங்களும், இப்பிறவிக்கண் வரும் துன்பங்களும் மறக்கருணையேயாகும் என்று இந்நூல் கூறுகின்றது.

மாணிக்கவாசக சுவாமிகள் அறக்கருணை மறக்கருணை இரண்டுக்கும் உள்ள தொடர்பினை பின்வருமாறு கூறுகின்றார்,

நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்று ஆலின் கீழ் இருந்து அங்கு அறம் உரைத்தான் காண் ஏடீ!
அன்று ஆலின் கீழ் இருந்து அங்கு அறம் உரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரம் மூன்றும் கூட்டோடே சாழலோ. (8:12:16)

மேற்படி திருச்சாழல் பாடலில் முதல்வன் சனகாதி முனிவர்க்கு யோகியாய் அமர்ந்து சொல்லாமல் சொல்லி ஞானமுதிப்பித்த வரலாறு அறக்கருணை என்பது போல திரிபுரங்கள் எரித்து ஒறுத்தமை மறக்கருணை என்று கூறுகின்றார். இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவையாகும். இரண்டும் கருணையால் நிகழ்ந்தவையாகும்.

அப்பர் சுவாமிகளை முதல்வன் சூலை கொடுத்து ஆட்கொண்டான். அவரது வரலாற்றில் அவர் பல இன்னல்களையும் கடந்து முதல்வன் திருவடியை அடைந்தமையினைக் காணலாம். அப்பர் தமது வாக்காகவே,

ஓதுவித்தாய்முன் அறவுரைகாட்டி அமணரோடே
காதுவித்தாய் கட்டநோய் பிணிதீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித்தாய் நின்பணி பிழைக்கிற் புளியம்வளாரால்
மோதுவிப்பாய் உகப்பாய் முனிவாய் கச்சியேகம்பனே. (4:99:1)

என்று கூறியிருத்தல் காணலாம்.

அதுபோன்றே சமயாச்சாரியார்களுள் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் சத்தியம் தவறியமைக்கு அவரது கண்கள் இரண்டினையும் முதல்வன் பறித்தார். சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியார்க்குச் செய்த சத்தியத்தை மீறி திருவாரூர் புறப்பட்டது பரவையார் மீது இருந்த ஈர்ப்பால் அன்று, தியாகராஜர் மேல்வைத்த ஈர்ப்பினாலாகும். இருப்பினும் செய்த தவறுக்காக முதல்வனால் தண்டிக்கப்பட்டு நேரிய வழிப்பட்டார் சுந்தரர். தவறு செய்தால் அதில் இருந்து திருந்திக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என்பதை,

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப் பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறியவொண்ணா எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும்வயல் பழனத்து அணி ஆரூரானை மறக்கலுமாமே. (7:59:1)

எனும் செய்யுளில் சுந்தரர் கூறியிருத்தல் காணலாம். தவறு என்பது தெரியாது செய்வது அத்தகைய தவறினைத் திருத்திக் கொள்ள முதல்வன் சந்தர்ப்பம் வழங்குவான் என்பதை 'பிழையெலாம் தவிரப் பணிப்பான்' என்று மேற்போந்த பாடலில் கூறினார். அதுவன்றித் தெரிந்து தவறு செய்யின் அதற்கான தண்டனை கடுமையானதாக அமைந்து விடும். சுந்தரரை அறிமுகம் செய்யும் சேக்கிழார் சுவாமிகள் கயிலையில் அணுக்கத் தொண்டராக இருந்து வினைவயத்தால் பெண்ணின்மீது கொண்ட மையலால் பூலோகத்தில் பிறந்து அத்தவறுக்கான தண்டனையினை அனுபவிக்கையில் மீண்டும் வினைவயத்தால் தண்டிக்கப்பட்டுப் பின்னர் ஆட்கொள்ளப்பட்டார். மலக்கோண் நீங்கும்வரை முதல்வன் மறக்கருணை தொடரும். பின்னர் அதுவே அறக்கருணையாக மாறிவிடும்.

முதல்வனது சத்தி அருட்சத்தியே அதுவே மறக்கருணையின்போது திரோதாயியாகச் செயற்படுகின்றது. உயிர்கள் பக்குவம் பெற்றபின்பு அதுவே பின்பு அருட்சத்தியாக மாறிவிடும் இதனையே 'சினமருவு திரோதாயி' என்றார் உமாபதிசிவாசாரியார். முதல்வனது சத்திகளை இச்சா, ஞானா, கிரியா என்று மூவகையில் அடக்கிவிடலாம். ஞானம், கிரியை வேறுபாட்டுக்கு ஏற்பவே மகேசுர மூர்த்தங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இச்சை பற்றிக் கூறுகின்றபோது முதல்வனது இச்சை உயிர்கள்பால் நேசமாகும். அதனால் இச்சையானது ஞானம் கிரியைபோல கூடிக்குறைதல் இல்லாது ஒரே தன்மையாக இருக்கும்.

தமிழ்ச் சங்கத் தலைமைப்புலவரான நக்கீரர் சிவபெருமானோடு வாதம் செய்து பெருமான் கோபத்துக்கு ஆளாகினார். பின்னர் முதல்வனது கருணைக்குப் பாத்திரமாகித் தண்டனையில் இருந்து மீட்சியும் பெற்றார். முதல்வனது கோபம் உயிர்களுக்கு அனுக்கிரகமே என்பதை தெளிவுபடுத்த 'கோபப்பிரசாதம்' எனும் நூலினை நக்கீரர் செய்து அருளியுள்ளார். இது பதினோராவது திருமுறையில் காணப்படுகின்றது. இதிகாச புராணங்கள் இன்னும் பிற வரலாறுகளில் முதல்வனால் தண்டிக்கப்பட்ட நிகழ்வும் அடியார்கள் தம்மைத் தாம் வருத்தும் செயலும் மறக்கருணை என இந்நூல் கூறுகின்றது. தக்கன் வேள்வி தகர் தின்றமை, மலரவன் சிரம் கொய்தமை, காமனைச் சுட்டெரித்தமை, இராவணனை கயிலைமலையில் அடர்வித்தமை,

கூற்றுவனைக் குமைத்தமை, கண்ணப்பர் கண்ணிடந்து அப்பியமை, சண்டீசர் தந்தை தாளரிந்தமை, சாக்கியர் கல்லெறிந்து வழிபட்டமை என்பன மறக்கருணை என்று நக்கீரர் கூறியுள்ளமையைக் காணலாம்.

சூரன் முருகனால் தண்டிக்கப்பட்டான். அவ்வாறு அவன் முருகனால் தண்டிக்கப்படுதற்குப் பெருந்தவம் செய்திருக்க வேண்டும் என்று கச்சியப்பர் கூறுகின்றார். முருகனால் ஒறுத்து சூரன் ஆட்கொள்ளப்பட்டமை மறக்கருணை. இதனை,

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள் பெற்று உய்ந்தான்''
(கந்தபுராண யுத்தகாண்ட சூரபன்மமன் வதைப்படலம்:496)

என்று கச்சியப்பர் கூறுதலில் காணலாம். சூரபதுமன் அஞ்ஞான வடிவானவன். அவன் ஆணவத்தின் அம்சம். முருகன் ஞானமே வடிவானவன் அவன் அருள் ஒளி. ஒளிமுன் இருள் முனைத்துத் தோன்றுவதில்லை. அதுபோல் அருள்முன் ஆணவம் முனைத்துத் தோன்றாது அடங்கிவிடும். ஆணவம் அடங்கி இருப்பதால் அதனது நித்தியத்துக்கும் கேடில்லை என்பதை இச்சம்பவம் நன்கு தெளிவு படுத்துகின்றது.

இருளின் வருகை ஒளியின் வருகையை முன்கூட்டியே கூறிவிடுவது போலத் துன்பம் வருவது இன்பத்துக்கான ஆரம்பமாகும். முதல்வன் துன்பம் தருவது குறைவற்ற பேரின்பத்தை நல்குவதற்காகும். இவ்வுலகில் யாரும் துன்பத்தில் நிலைத்திருப்பதில்லை பிறந்த அத்தனை உயிரும் முத்தி அடைந்துவிடும் என்பது சித்தாந்த முடிபு. திருவிளையாடல் புராணத்தில் மாபாவி சாபம் நீங்கிய படலத்தில் உலகில் மிகப்பெரும் தவறு செய்தவன் உய்வதற்கான வழியினை சொக்கநாதர் சொல்வதாக அமைகின்றது. எனவே மறக்கருணை என்பது உயிர்களுக்கு முதல்வன் அருள்வதற்கான வழியாகும்.

தவறு செய்தவர் தண்டிக்கப்படவேண்டும். தண்டனையின் நோக்கம் தவறு செய்தவர் திருந்தி நன்னெறிப் படுவதற்காகும். அதுபோல் முதல்வனது தண்டனையும் உயிர்களின் மலத்தினை நீக்குவதற்காகும். முதல்வன் எல்லாம் வல்லவன் எனின் அவன் எதற்குத் தண்டிக்க வேண்டும். மறக்கருணை இன்றி அறக்கருணை மட்டும் போதாதா? தண்டிக்காது இன்பம் நல்கிவிடமுடியாதா? என நினைக்கலாம். உண்மையில் முதல்வன் நினைத்தவுடன் உயிர்க்கு முத்தியின்பம் நல்கிவிட முடியாது. திருவுந்தியார் இதனை, 'பொற்கொழுக் கொண்டு வரகக் குழுவதென்' (திருவுந்தியார்.பா.38) என்று கூறுகின்றது. குழந்தைக்கு பொற்கிண்ணத்தில் பாலைக் கொடுத்தால் அது பாலைக் குடித்துவிட்டு அதனை வீசிவிடும். அதற்கு பொன்னின் அருமை தெரிவதில்லை. அதுபோலவே உயிர்க்கும் முதல்வன் பக்குவம் பெற முன்பு முத்தியின்பம் கொடுத்தால் அதனைப் பெற்று அனுபவிக்கும் பக்குவம் உயிர்க்கு இல்லை. சூரியன் எப்பொழுதும் உள்ளது. தாமரைத் தடாகத்தில் இருக்கும் அத்தனை

முகைகளும் மலர்வதில்லை அதுபோல் முதல்வன் அருள் எங்கும் இருப்பினும் அதனைப் பெற்று முத்தி பெறுவதற்கு உயிர்களால் முடிவதில்லை. கல்லானது உழிபட்டுச் சிலையாதலும், இரும்பு அடிபட்டுப் பொருளாதலும் இயற்கை. அதுபோல் உயிர்கள் பக்குவம் பெற வேண்டுமானால் முதல்வன் மறக்கருணைக்கு அவை ஆளாதல் வேண்டும்.

தத்துவ நோக்கில் எதற்காக மறக்கருணை நிகழவேண்டும் எனில் அதற்கான பதிலை இலகுவில் கூறிவிடலாம். ஆணவம் சடப்பொருள். அது உயிரின் அறிவில் விரவி உயிர்க்கு இயல்பாக உள்ள அறிவினை மறைக்கின்றது. ஆணவ மறைப்பு நீங்கினால் உயிர்க்கு இயல்பான ஞானம் வெளிப்படும். உயிர்க்கு இன்பம் அதனது அறிவு வெளிப்படுதலாகும். துன்பம் அறிவு மறைக்கப்பட்டிருத்தலாகும். எனவே ஆணவ நோய் நீக்கத்துக்கான மருந்தே மறக்கருணை. ஆணவம் சடம் என்பதால் அதனது ஆற்றல் செயல்பட்டே நீக்கும். ஆணவத்தைக் காரியப்படுத்தி அதனது ஆற்றலை மழுங்கச் செய்ய முதல்வன் ஆணவத்தைக் காரியப்படுத்த வேண்டும். ஆணவம் செயற்படும் போது உயிர் அறிவு மறைக்கப்படுதலும், அது துன்பப் படுதலும் இயல்பு. ஆனால் ஆணவம் சடம் என்பதால் அதன் ஆற்றல் படிப்படியாக குறையும். குறைந்த ஆற்றல் மீண்டும் கூடுவது இல்லை. ஆணவ ஆற்றல் குறையும் போது உயிர் அறிவு படிப்படியாக வெளிப்படும். ஒருகட்டத்தில் உயிர் அறிவு முழுமையும் மலமறைப்பில் இருந்து நீங்கிவிடும். இதுவே உயிர்க்கு முத்தியாகும். செம்பில் களிம்பாக இருக்கும் அழுக்கு, இரசவாதத்தில் முழுமையும் நீங்கிப் பொன்னாகி விடும்போது பொன்னைக் களிம்பு பற்றுவதில்லை. அதுபோலவே முதல்வன் உபதேசம் எனும் ஞானத்தால் அஞ்ஞானம் நீங்கி மெய்ஞானம் பெற்ற உயிரை அஞ்ஞானம் மீண்டும் பற்றுவதில்லை.

**நிறைவுரை:**

முதல்வனுக்கு கருணை என்பதே இயல்பாகும். கருணையின் நிமித்தம் உயிர் அறிவினைப் பக்குவப்படுத்தவே மறக்கருணை நிகழ்கின்றது. மறக்கருணை அறக்கருணையின் எதிர்மறை வடிவமே. எனினும் கருணை ஒன்றே. மறக்கருணை மூலம் அறியாமையினை நீக்கி உயிர்க்கு நலமுண்டாக்குவதால் அதுவும் அறக்கருணையின் பாற்பட்டதே.

**உசாத்துணை**

அருணைவடிவேலு முதலியார், சி., (1991), சிவஞான போத மாபாடிய பொருள்நிலை விளக்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

ஆனந்தராசன், ஆ., (2010), சிவஞான போதம் வழித்துணை விளக்கம், நர்மதா பதிப்பகம், சென்னை.

கந்தையா.மு., (1998), சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

கார்த்திகேசு யோகி.க., (உரை), (1971), கந்தபுராணம் யுத்த காண்ம் மூலமும் உரையும், இந்துமாமன்றம், யாழ்பாணம்.

சிவஞானசுவாமிகள்., (உரை) (2001), சிவஞானசித்தியார் சுபக்கம், சிவஞானசுவாமிகள் பேரவை. விக்கிரமசிங்கபுரம்.

திருநாவுக்கரசு தம்பிரான் சுவாமிகள்., (பதிப்பாசிரியர்) (2011), மூன்றாம் பதிப்பு, திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரம் நான்காம் திருமுறை, ஞானசம்பந்தன் பதிப்பகம், மயிலாடுதுறை.

முத்தையபிள்ளை, பொ., (1926), சிவஞான சித்தியார் சுபக்கம் மூலமும், திராவிட பாடியகர்த்தராகிய மாதவச் சிவஞானயோகிகள் அருளிய உரையைத் தழுவி பொ. முத்தையபிள்ளை எழுதிய பொழிப்புரையும். காரைக்குடி ஊழியன் அச்சுக்கூடம், காரைக்குடி.

(2011), பதினோராம் திருமுறை, ஞானசம்பந்தன் பதிப்பகம், தருமை ஆதீனம்.

(1994), (மூன்றாம் பதிப்பு) சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை.

John, H., Piet., (1952), A Logical Presentation of the Saiva Siddhanta Philosophy, The Christian Literature Society, India.